12.09.2025.

<u>கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம் (விரைவு நீதிமன்றம் )</u>

<u>விழுப்புரம்.</u>

<u>அமர்வு வழக்கு எண்.35/2025</u>

அ.சா.8

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திருமதி.டாக்டர்.கோகிலவாணி | | |
| க /பெ | முரளி | | |
| கிராமம் | விழுப்புரம் | தொழில் | முதுநிலை உதவி மருத்துவர் |
| தாலுக்கா | விழுப்புரம் | வயது | 42/2025 |
| மாவட்டம் | விழுப்புரம் | தேதி | 12.09.2025 |

இன்று உதவியாளர் அவர்களால் சத்திய பிரமாணம் செய்யவிக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் தற்போது விழுப்புரம் அரசு மருத்துவமனையில் முதுநிலை உதவி மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 04/08/2024 ஆம் தேதி அதே மருத்துவமனையில் அதே பொறுப்பில் பணியில் இருந்த போது, அன்று இரவு சுமார் 10.10 மணியளவில் 48 வயதுடைய கமாலூதீன் என்பவர் தனியாக சிகிச்சைக்கு வந்திருந்தார். அன்று இரவு சுமார் 7-30 மணியளவில், ஜானகிபுரம் அங்காளம்மன் கோயில் அருகில் அடையாளம் தெரிந்த 2 நபர்கள் தன்னை கத்தியின் கைப்பிடியால் தாக்கியதாக கூறினார். அவரை பரிசோதித்த போது அவர் சுயநினைவுடன் இருந்தார். அவருக்கு எந்தவித வெளி காயங்களும் இல்லை. வழுது பக்க கட்டை விரலில் வலி இருப்பதாக கூறினார். அவருக்கு முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்டு அவரை புறநோயாளியாக சிகிச்சை அளிக்கப்பட்டது. அது சம்பந்தமாக 12/09/2024 தேதியில் நான் அவருக்கு ஏற்பட்ட

காயம் சொற்ப காயம் என்று சான்று வழங்கினேன். அந்த விபத்து பதிவேடு நகல் அ.சா.ஆ.8 ஆகும்.

அதே தேதியில் அன்று இரவு 10.15 மணிக்கு சதாம் உசேன் என்பவர் தனியாக சிகிச்சைக்கு வந்திருந்தார். அன்று இரவு 07.30 மணியளவில் ஜானகிபுரம் அங்காளம்மன் கோயில் அருகில், அடையாளம் தெரிந்த இரு நபர்கள் இரும்பு ராடால் தன்னை தாக்கியதாக கூறினார். அவரை பரிசோதித்த போது அவர் சுயநினைவுடன் இருந்தார். அவருக்கு எந்தவித வெளிக்காயங்களும் இல்லை. வலது பக்க மார்பகத்தில் மற்றும் தோள்பட்டையில் வலி இருப்பதாக கூறினார். அவருக்கு வெளி நோயாளியாக சிகிச்சை அளித்தேன். 12/09/2024 அன்று அவருக்கு ஏற்பட்ட காயம் சொற்ப காயம் என்று என்னால் சான்று வழங்கப்பட்டது. அது சம்பந்தமாக நான் வழங்கிய விபத்து பதிவேடு அ.சா.ஆ. 9 ஆகும். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :-</u>**

என்னை போலீசார் என்றைய தேதியில், எப்போது விசாரணை செய்தார்கள் என்றால், போலீசார் விசாரணை செய்தார்கள். தேதி எனக்கு ஞாபகம் இல்லை. என்னிடம் அந்த நபர்கள் சிகிச்சைக்கு வருவதற்கு 3 மணி நேரத்திற்கு முன்பு இந்த சம்பவம் நடந்ததாக சொன்னார்கள். அதன் பிறகு தான் நான் அவர்களுக்கு சிகிச்சை வழங்கினேன். நான் மேற்கண்ட 2 நபர்களையும் தொட்டு பார்த்து சிகிச்சை அளித்தேனா என்றால் இல்லை. அவர்கள் வலி என்று தானாகவே சொன்னார்கள். அதைத்தான் நான் விவரித்துள்ளேன்.

**<u>மறுவிசாரணை</u>**

**<u>இல்லை</u>**